**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts Madurai.

Calender : **SC.No.02/2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ**.**சா**.17**
**Defence**
**Court**

**Name : முத்துக்குமாரசாமி**

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 11.03.2022

முதல் விசாரணை:

நான் தென்காசி மாவட்டம் எல்.ஆர்.எஸ் பாளையத்தில் குடியிருக்கிறேன். நான் கூலக்கடை பஜாரில் குருமெடிக்கல்ஸ் என்ற பெயரில் மருந்துக்கடை நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. இறந்த குமார்பாண்டியன், சக்திபாண்டியனை , சுரேஷ், சேகர் ஆகியோரை தெரியாது.

சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் பொதுவாக காலை 10.30 மணிக்கு கடையை திறப்பேன். 14.08.2007 அன்று நான் கடையை திறக்க வில்லை. போலீசார் என்னை கடையை திறக்க அனுமதிக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் போலீசார் விசாரனையில் தென்காசி கூலக்கடை பஜாரில் 14.08.2007 ம் தேதி காலை 10.00 மணிக்கு எனது மருந்துக்கடையில் இருந்தபோது, தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழகத்தை சேர்ந்த ஜபர்சாதிக், என்ற ஜாகிர் உசேன், சுபகான் ஜவுளிக்கடை இஸ்மாயில் ஆகியோர். சந்திக்கும் பகுதிகளில் மலையப்பன், பூக்கடைரமேஷ் மற்றும் ஆட்டோ ரமேஷ், ஆபிரகாம் மற்றும் ஆகியோரும் அங்கும் இங்கும் நடமாடிக்கொண்டடிருநதபோது காலை 10.15 மணிக்கு TN 76 B 3448 என்ற ஆட்டோவில் சிலர் அங்கு வந்தனர் என்றும் அலாவூதீன், மோட்டார் சைச்சிளில் கிழக்கு நோக்கி சென்றார்கள் என்றும் அவர்களளுடன் ஆட்டோவில் வந்தவர்களும் சென்றார்கள் என்றும் என் கடையை தாண்டி கிழக்கே சென்றதும் பெரும் சப்தம் கேட்டது என்றும் நான் வெளியே வந்து பார்த்தபோது, மேலமுத்தாரம்மன் கோயில் தெருவிலும எல்.ஆர்.எஸ் பாளையம் சந்திப்பிலும் ஒருவரை யொருவர் மாறி மாறி வெட்டி தாக்கிகொண்டனர் என்றும், நான் சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்றும், கலவரம் முடிந்ததும் நான், ஓடி வந்து கடைக்குள் ஒளிந்துகொண்டேன் என்றும் சம்பவத்தில் சேகர் சுரேஷ், செந்தில், அசன்கனி, பசீர், நாகூர்மீரான்

இறந்துபோனார்கள் என்றும், கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கடைநடத்தும தெருவில் மொத்தம் மூன்று ஆங்கில மருந்துக்கடைகள் உள்ளது. பானுமெடிக்கல், இந்திரா மெடிக்கல் ஆகிய இரண்டு மருந்துக்கடைக்கள் உள்ளது. நான் குடியிருக்கும் பகுதியில் நாயுடு சமூகத்தினர் அதிகம் குடியிருக்கிறார்கள். நான் குடியிருக்கும் பகுதியிலும் கடை நடத்தும் பகுதியிலும் இஸ்லாமியர்கள் அதிகம் வசிக்கினர்கள் என்றும் அதிகம் பேர் தொழில் செய்து வருகின்றனர் என்றும் அதனால் எதிரிகளை தெரியும் என்றால் சரியல்ல. பொதுவாக கடையை இரவு 11.00 மணி வரை நடத்துவோம் என்றால் சரியல்ல. தற்போது வியாபாரம் குறைவு என்பதால் தான் 11.00 மணிவரை கடையை நடத்துகிறோம். பொதுவாக மற்ற கடைகளை சீக்கிரம் முடிவிடுவார்கள் மருந்துக்கடைகள் மட்டும் தான் நள்ளிரவு வரை திறந்திருக்கும். நள்ளிரவு நேரத்தில் கடை திறந்திருக்க வேண்டும் என்ற நிலையில் எதிரிகளால் ஆபத்து ஏற்படக்கூடும் என்ற பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடைக்கு நேர் பின் பகுதியில் குடியிருக்கிறேன் காலை சுமார் 8.00 அல்லது 8.30 மணி யளவில் வீட்டை விட்டு வெளியே வருவேன். என் மகனை காலை 9.00 மணிக்கு பள்ளியில் விட்டு விட்டு என் கடைக்கு தேவையான மருந்துகனை மொத்த விற்பனை கடையில் இருந்து வாங்கி கொண்டு கடைக்கு திரும்புவேன். எனக்கு தென்காசியில் உள்ள பொதிகை மெடிக்கல் கடையை தெரியும். எனக்கு தேவையான மருந்துகளை அந்த கடையிலும் வாங்குவேன். பொதிகை மெடிக்கல் கடையில் உள்ள எவரையும் எனக்கு தெரியாது. மருநதுக்ககடை உரிமையாளர்கள் சங்க கூட்டம் நடைபெறும் அதில் யார் யார் கலந்துகொள்வார்கள் என்று எனக்கு தெரியாது. நான் 26 வருடமாக மெடிக்கல் நடத்துகிறேன். பொதிகை மெடிக்கல் சம்சுதீன் என்பவர்

இவ்வழக்கில் எதிரி என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் எதிரிகளை காப்பாற்றும் பொருட்டு பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் ச ரியல்ல.